**நீதித்துறை நடுவர் எண். 3, நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்**

**சி.சி. எண். 96/2019**

2020ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: மகேஸ்வரி வயது:

த/பெ.(அ)க.பெ: கார்த்திக் தொழில்: கூலி

ஊர் : பெரியவெள்ளகுட்டை சமயம்: இந்து

வட்டம் : வாணியம்பாடி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் பெரியவெள்ளகுட்டை கிராமத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள்.கடந்த 14.07.2018ம்தேதி காலை 08.00 மணிக்கு நான் என் வீட்டின் அருகிலுள்ள பஞ்சாயத்து தண்ணீர் குழாயில் தண்ணீர் பிடிக்க சென்றேன். ஆஜர் எதிரிகள் என்னை தண்ணீர் பிடிக்க கூடாது என தடுத்தார்கள். தண்ணீர் குழாய் நாங்கள் போட்டது அதனால் நீ தண்ணீர் பிடிக்க கூடாது என சொன்னார்கள். ஆஜர் எதிரிகள் நான்கு பேர் மற்றும் அவர்களோடு சசிகலா என்பவரும் என்னை தகாத வார்த்தைகளால் பேசி தாக்கினார்கள். மேலும் என் புடவையை அவிழ்த்து விட்டார்கள். நான் போலீசாரிடம் சசிகலா தாக்கிய விபரத்தையும் கூறினேன். அவர்கள் எழுதிக்கொள்ளவில்லை. என்னுடைய அத்தை இந்திராணி தடுக்க வந்தார். அவரையும் கல்லால் தாக்கி மண்டையை உடைத்து விட்டார்கள். என்னையும் மண்டையில் கல்லால் தாக்கினார்கள். எனது தம்பி ஞானவேலை மூங்கில் கொம்பால் தாக்கினார்கள். எனது தம்பிக்கு கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது.முதலில் நிம்மியம்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். ஆம்பூலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். நான் அதில் கையெழுத்து போட்டேன்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆகும்.எதிரிகள் தாக்க பயன்படுத்திய கொம்புகளை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். ( சாட்சியிடம் வழக்கு சொத்தான இரண்டு கொம்புகளை காட்டி கேட்டப்போது அந்த கொம்புகளால் தாக்கவில்லை என்றும், எதிரிகள் மூங்கில்கொம்புகளால் தாக்கியதாக கூறுகிறார்). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**நீதித்துறை நடுவர் எண். 3, நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்**

**சி.சி. எண். 96/2019**

2020ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: ஞானவேல் வயது: 33

த/பெ.(அ)க.பெ: விஸ்வநாதன் தொழில்: மேஸ்திரி

ஊர் : பெரியவெள்ளகுட்டை சமயம்: இந்து

வட்டம் : வாணியம்பாடி சாதி:

மாவ்ட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் பெரியவெள்ளகுட்டை கிராமத்தில் குடியிருக்கிறேன். மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். அ.சா.1 எனது அக்கா.கடந்த 14.07.2018ம்தேதி காலை சுமார் 07.00 -8.00 மணி இருக்கும், அ.சா.1 எனது அக்கா தெருவிலுள்ள பஞ்சாயத்து குழாயில் தண்ணீர் பிடிக்க சென்றதாகவும், அப்போது ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை ஏற்பட்டு, அவர்கள் எனது அக்காவை தாக்குவதாகவும் எனது அக்கா மகன் என்னிடம் வந்து தகவல் சொன்னார்.அவர்கள் அடிக்கடி எங்களிடம் பிரச்சனை செய்து வந்தார்கள். சம்பவத்தில் எனது அக்காவின் புடவையை இழுத்து விட்டார்கள். அந்த கோவத்தில் வந்து நான் கேட்டு எனது அக்காவை தாக்குவதிலிருந்து நான் தடுத்தேன். அவர்கள் என்னை அடிக்க வந்தார்கள்.அப்போது 1ம் எதிரி நீளமான ஒரு கொம்பால் என் தலை மீது தாக்க வந்தார். நான் அப்போது கையை உயர்த்தி தடுத்தேன். அப்போது எனது இடது கையின் மீது கொம்பு பட்டு காயம் ஏற்பட்டது. சாட்சியிடம் வழக்கு சொத்தை காட்டி அடையாளம் கேட்டபோது அந்த கொம்பு போல தான் இருந்தது. எனக்கு காயம் ஏற்பட்டதும் மயக்கம் வந்து விட்டதால் எனக்கு தற்போது சரியாக நினைவு இல்லை என கூறுகிறார். முதல் எதிரி என்னை தாக்கியதில் எனக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது அத்தை இந்திராணியை தலை மீது கல்லால் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள். சம்பவத்தில் எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் யார் என்ன காயம் ஏற்பட்டது என தெரியவில்லை. சாட்சி இடது கை ஆள்காட்டி விரல் மற்றும் நடுவிரல் இடையே தையல் போட்டு சிகிச்சை அளித்ததை காண்பித்தார். இடது கை எலும்பு முறிவுக்கு தனியாக கட்டு போட்டதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**நீதித்துறை நடுவர் எண். 3, நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்**

**சி.சி. எண். 96/2019**

2020ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆனந்தன் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: இந்திராணி வயது: 60

த/பெ.(அ)க.பெ: குப்பன் தொழில்: கூலி

ஊர் : வெள்ளகுட்டை சமயம்: இந்து

வட்டம் : வாணியம்பாடி சாதி:

மாவ்ட்டம் : வேலூார்

முதல் விசாரணை:-

நான் வெள்ளகுட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ தெரியும். எனது உறவினர்கள்.ஆஜர் எதிரிகளை தெரியும்.எனக்கு படிப்பு அறிவு இல்லை.தேதி சரியாக தெரியாது. ஆனால் காலை சுமார் 08.00 மணி இருக்கும். அ.சா.1 தண்ணீர் பிடிக்க சென்றார். அப்போது ஆஜர் எதிரிகள் அவரை கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அ.சா.1னும் திட்டினார். நானும் அப்போது அங்கிருந்தேன். முதல் எதிரி அ.சா.1ன் புடவையை உருவினார். அப்போது ஒருவருக்கொருவர் கைகலப்பு செய்துக்கொண்டார்கள். நான் அவர்களை விலக்கிவிட்டேன். அப்போது ஆஜர் எதிரிகள் என் மண்டை மீது கல்லால் தாக்கினார்கள். நானும் அ.சா.1னும் சத்தம் போட்டதால் அக்காவை அடிக்கிறார்கள் என்று அ.சா.2 ஓடி வந்தார். அப்போது அ.சா.2ஐ முதல் எதிரி மூங்கில் கொம்பு ஒன்றால் தாக்கினார். அதில் அ.சா.2ன் கையில் கிழித்துக்கொண்டது.மேலும் அ.சா.2க்கு காயம் ஏற்பட்டது.அ.சா.1 மற்றும் அ.சா.2 உடன் நானும் நிம்மியம்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து ஆம்பூலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.